இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்
MCC 1206 – கணக்கியலும் நிதியியலும்
இறுதிப்பரீட்சை - 2005/2006
காலம்: இரண்டு மணித்தியாலங்கள்

திகதி: 25.02.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 3.30

முதலாம் வினா அடங்கலாக ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.
நிகழ்ச்சிபடுத்தப்படாத எண் கூட்டெயந்திரம் பாவிக்க அனுமதிக்கப்படும்

1. நுகேகொடையைச் சேர்ந்த "பியசேன வணிக நிலையத்தின்" கணக்கேடுகளிலிருந்து பின்வரும் பரீட்சை மீதி எடுக்கப் பட்டுள்ளது.

பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 01.04.2004ல் இருப்பு | 675,000 | |
| உள்முகக் காவுகை | 18,900 | |
| வெளிமுகக் காவுகை | 6,400 | |
| மின்சாரச் செலவுகள் | 26,000 | |
| அச்சிடலும் எழுது கருவியும் | 18,000 | |
| காப்புறுதி | 16,000 | |
| கடன் வட்டி | 60,000 | |
| அறவிட முடியாத கடன் | 11,000 | |
| உட் திரும்பல் | 21,000 | |
| கொள்வனவுகள் | 1,160,000 | |
| நிலமும் கட்டிடமும் | 700,000 | |
| தளபாடமும், பொருத்திகளும் | 300,000 | |
| இயந்திரம் | 600,000 | |
| கணணி இயந்திரம் | 125,000 | |
| வரிகள் | 1,800 | |
| கணக்காய்வுச் செலவுகள் | 15,000 | |
| சட்டாலோசனை செலவுகள் | 8,000 | |
| அஞ்சல் செலவு | 1,500 | |
| கழிவுகள் | 7,400 | |
| கடன்பட்டோர் | 150,000 | |
| வருமதி உண்டியல் | 600,000 | |
| வங்கி மீதி | 365,000 | |
| கையில் காசு | 80,000 | |
| மூலதனம் | | 1,200,000 |
| விற்பனைகள் | | 2,000,000 |
| வங்கிக் கடன்(16% வருட வட்டி) | | 800,000 |
| செல்மதி உண்டியல்கள் | | 100,000 |
| கடன் கொடுத்தோர்கள் | | 600,000 |
| ஏனைய வருமானங்கள் | | 65,000 |
| பெற்ற கழிவுகள் | | 24,000 |

| | | |
|---|---|---|
| பெறுமானத் தேய்வுகளுக்கான ஒதுக்கீடுகள் | | |
| நிலமும் கட்டிடமும் | | 70,000 |
| தளபாடமும் பொருத்திகளும் | | 30,000 |
| இயந்திரங்கள் | | 60,000 |
| கம்பியூட்டர்கள் | | 12,500 |
| ஐயத்திற்கான ஒதுக்கம் | | 4,000 |
| | 4,966,000 | 4,966,000 |

பின்வரும் மேலதிக விபரங்களும் தரப்படுகின்றது.

(i) 31.03.2005 லிருந்து இருப்பு ரூபா. 350,000/=

(ii) முற்பணமாகச் செலுத்திய செலவுகள்

காப்புறுதி ரூபா. 1,500/=
வரிகள் ரூபா. 1,700/=

(iii) 31.03.2005ல் ஏற்படக்கூடிய செலவுகள்

கணக்காய்வுச் செலவு ரூபா. 5,000/=
மின்சாரம் - ரூபா. 1,700/=

(iv) எல்லாச் சொத்துக்களும் 10% 'நேர் கோடுமுறையில் தேய் பொறுமானம் காணப்படல் வேண்டும்.

(v) சொந்தகாரரினால் தனது செலவிற்காக எடுக்கப்பட்ட ரூபா. 500/= புத்தகங்களில் பதியப்படவில்லை.

(vi) ஐயப்பாட்டிற் கடனுக்கான ஒதுக்கீடு மொத்த கடன் பட்டோரில் 5% இருக்க வேண்டும்.

பின்வரும் இறுதி அறிக்கையினை தயாரிக்குக.

(அ) 31.03.2005ல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார, இலாப நட்டக்கணக்கு

(ஆ) 31.03.2005 க்குரிய ஐந்தொகை

(40 புள்ளிகள்)

2. (அ) கணக்கிடுதலை விபரித்து, அதனில் அடங்கியுள்ள பல்வேறு கருமங்களைக் குறிப்பிடுக.

(ஆ) நிலையான மூலதனத்தில் நீர் காணும் நான்கு(04) வேறான காரணிகளை விளக்குக.

(இ) சிறிய தர வணிகர்கள் பலவீனமான காசு முகாமைத்துவத்தினால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை?

(ஈ) வங்கி பற்றுகட்டளை((Draft) களுக்கும், வங்கிக் கடனுக்குமுள்ள வேற்றுமைகள் யாவை?

(உ) முறையற்ற பதிவேடுகளினால் சிறிய தர வணிகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாது?

(20 புள்ளிகள்)

3. பின்வருபவை நுகேகொடையிலுள்ள ஒரு சிறிய தர வணிகத்தின் சனவரி 1, 2006ல் ஆரம்பிக்கும் காலாண்டிற்கான உத்தேச கொடுக்கல் வாங்கல்களாகும்.

| விபரம் | சனவரி | பெப்ரவரி | மார்ச் |
|---|---|---|---|
| காசு பற்றுக்களும் கொடுப்பனவுகளும் | | | |
| விற்பனைகள் | 570,000 | 650,000 | 720,000 |
| ஏனைய வருமானங்கள் | 60,000 | 90,000 | 70,000 |
| மூலப்பொருள் செலவு | 150,000 | 140,000 | 170,000 |
| பெற்றுக்கொண்ட விற்பனைதரகு | 20,000 | 50,000 | 40,000 |
| செலுத்திய விற்பனைதரகு | 60,000 | 68,000 | 80,000 |
| புதிய பங்காளரின் மூலதனம் | - | - | 300,000 |
| சம்பளமும், கூலியும் | 35,000 | 35,000 | 35,000 |
| அட்டுறு செலவுகள் | 18,000 | 17,000 | 21,000 |
| நிலையச் செலவுகள் | 15,000 | 18,000 | 20,000 |
| தொழிலாளர் பயிற்சி செலவுகள் | 12,000 | - | - |
| கடன்பட்டோரின் வரவு | - | 350,000 | - |
| கடன்கொடுத்தோருக்கு செலுத்தியது | - | - | 250,000 |
| இயந்திரத்தின் மீது மூலதனச் செலவுகள் | - | - | 600,000 |
| விநியோக வாகனக் கொள்வனவு | - | - | 680,000 |
| வாகனத்தின் எரிபொருள் செலவு | - | - | 25,000 |
| விற்பனவும், விநியோகஸ்தர்களுக்கும் | - | - | 18,000 |
| பங்கு இலாபம் | 80,000 | - | - |
| நிமாலிடம் கடன் | - | 300,000 | - |
| கொள்வனவுகள் | - | 80,000 | 150,000 |
| உள் முகக் காவுகை | - | - | 8,000 |
| விற்பனைகள்(விற்பனை முயற்சிமூலம்) | - | - | 275,000 |

(a) மேற்கூறிய தரவுகளை பாவித்து சனவரி 1, 2006 லிருந்து தொடங்கும் காலாண்டிற்குரிய காசு பஜட்டினைத் தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

4. (அ) வங்கி மேலதிகப் பற்று என்பதன் கருத்தினை விளக்குக.

(ஆ) ஓர் உற்பத்தி தொழிற்சாலையில் நீர் காணும் மூன்று வகையான இருப்புக்களைக் குறிப்பிடுக.

(இ) "குணசேகரன்" வணிக நிலையத்திலிருந்து பெறப்பட்ட பின்வரும் தரவுகள் விபரிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மூலதனம் | ரூபா. 1,000,000/= |
| நிலையான சொத்துக்கள் | ரூபா. 500,000/= |
| நடப்புச் சொத்துக்கள் (நிறுதி இருப்பு அடங்கலாக) | ரூபா. 400,000/= |
| தேறிய விற்பனைகள் | ரூபா. 1,500,000/= |
| நடமுறைப்பொறுப்புகள் | ரூபா. 240,000/= |
| இறுதி இருப்பு | ரூபா. 100,000/= |
| தேறிய இயக்கச் செலவுகள் | ரூபா. 200,000/= |
| நெடுங்கால திட்ட முதலீடு | ரூபா. 500,000/= |
| நல்லிணக்கம் | ரூபா. 300,000/= |
| விற்பனைச் செலவுகள் | ரூபா. 800,000/= |

மேற்கூறிய தரவுகளைக் கொண்டு பின்வரும் நிதி விகிதங்களை கணிப்பிடுக.

(i) தேறிய இலாப விகிதம்
(ii) மொத்த இலாப விகிதம்
(iii) நடைமுறை விகிதம்
(iv) விரைவு விகிதம்
(v) மூலதன வருவாய் விகிதம்

(20 புள்ளிகள்)

5. (அ) இரட்டை முறை பதிவினை ஒரு உதாரணத்துடன் விளக்குக.

(ஆ) அசையாச் சொத்துக்களின் தேய்வினை காண்பதற்குரிய மாற்று முறைகள் யாவை? அவைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(இ) சிறிய தர பொருளாண்மை(SME) முயற்சியில் பொரும்பாலும் பாவிக்கப்படும் செலவினை கணிக்கும் முறைகள் யாவை?

(ஈ) கணக்கீடு எண்ணக்கருக்களை குறிப்பிடுக.

(உ) "வங்கி மீள் பரிசீலனை அறிக்கை" என்பதன் கருத்து யாது? அதனை தயாரிப்பதின் அநுகூலங்கள் யாவை?

(20 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)